மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசிடமிருந்து அறிக்கைகள் வரப்பெற்றுள்ள கவன ஈர்ப்புகள், அறிவிப்புகளுடன் அவையில் வைக்கப்பட்டு உள்ளன. சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், அவற்றை உரிய மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால், அத் தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ள முதல் உறுப்பினர் மட்டும் அதனை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நேரம் கருதி இன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மீது விளக்கத்திற்காக ஒரு வினா மட்டும் அனுமதிக்கப்படும்.

அரசுத் துறையிடமிருந்து இதுவரை அறிக்கைகள் வராத கவன ஈர்ப்புகள், துறைகளிடமிருந்து அறிக்கைகள் வந்தவுடன், உரிய உறுப்பினர்களின் தகவலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

இன்று கூட்டத்தின் கடைசி நாளானதால், அறிக்கைகள் வரப்பெறாத கவன ஈர்ப்புகளை மட்டும் அவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்ய, சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

(1) சிவகங்கை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன் வெடி குண்டுகள் வெடித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ‘சிவகங்கை கலெக்டர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்தில் 14–4–1986 அன்று குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது குறித்து திரு. கு. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (திரு. கு. சுப்பராயன் இருக்கையில் இல்லை).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

கவன ஈர்ப்புகள்
[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]
அறிக்கை:

13–4–1986 ஞாயிற்றுக் கிழமை அன்று சிவகெங்கை வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் இளநிலை உதவியாளர் திரு. க. மணி என்பவர் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, மாலை சுமார் 2-30 . மணியளவில் அலுவலகம் முன்பாக பலத்த வெடிச்சத்தம் கேட்டதாகவும் வெளியில் வந்து பார்த்தபோது ஒரு நாய் படுத்திருந்ததாகவும், அந்நாயின் வாயில் ரத்தம் கொட்டிக் கொண்டிருந்ததாகவும்: இச்சம்பவத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்னால் வருவாய் அதிகாரி அலுவலகத்தின் பின்புறம் வெடிச்சத்தம் கேட்டதாகவும் அங்கு சென்று பார்த்தபோது ஒருநாய் இறந்துகிடந்ததாகவும், கொடுத்த புகாரின்பேரில் சிவகெங்கை காவல்நிலைய குற்ற எண். 94/86 இதச. பிரிவு 286 மற்றும் இந்திய வெடிபொருள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து கிடைத்த தடயங்களை வெடிமருந்து நிபுணர் ஆய்வு செய்துவருகிறார். காயம்பட்ட மற்றொரு நாயும் இறந்துவிட்டது.

சிவகெங்கையிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள பையூர் பிள்ளைவயல் என்ற கிராமத்தில் நரிக்குறவர்கள் சொந்தமாக வீடுகட்டி தங்கியுள்ளனர். அவர்கள் சிவகெங்கையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கரும்புக் கொல்லையிலும், நிலக் கடலை வயலிலும், கதிர்களைச் சேதப்படுத்தும் நரிகளைப் பிடிக்க, 'மாட்டுக் கொழுப்பு' தடவி வைத்திருந்த வெங்காய வெடிகளை நாய்கள் கவ்விக்கொண்டு வந்து, வட்டாட்சியர் அலுவலகத்தின் வளாகத்தில் வைத்துக் கடித்தபோது இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என விசாரணையில் தெரிய வருகிறது.

இருப்பினும் இதுகுறித்து தீவிர புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தச் சம்பவத்தின் தொடர்பாக இப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையோ, மக்கள் மத்தியில் பீதியோ இல்லை.

(2) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பதனிடும் ஆலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, வீ. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், டாக்டர் ந. மாசிலாமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.